

திருச்சி தெற்கு மாவட்டக் கழகக் கூட்டம் திருச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் மாவட்ட தி.மு.கழக அலுவலகத்தில் நடைபெற்றது. அவைத்தலைவர் கோவிந்தராஜ் வரவேற்புரை ஆற்றினார். கூட்டத்தில் மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சேகரன், வண்ணை அரங்கநாதன், சபியுல்லா, கவிஞர் சல்மா, துணைமேயர் திவ்யா, மாவட்டத் துணைச் செயலாளர்கள் செங்குட்டுவன், மூக்கன், லீலாவேலு, குணசேகரன், பகுதி கழகச் செயலாளர் மோகன் மற்றும் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மற்றும் சிறப்பு அழைப்பாளர்களாக உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் துணை மேயர், மண்டல தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய, பேரூராட்சி பெருந்தலைவர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைவரும் கலந்துகொண்டனர்.



தலைமை தி.மு.க. தீர்மானக் குழு நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம், நேற்று காலை, சென்னை – அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் கழகத் தீர்மானக் குழுத் தலைவர் கவிஞர் தமிழ்தாசன் தலைமையிலும் தீர்மானக் குழுச் செயலாளர்கள் மீ.அ.வைத்திலிங்கம், கீரை எம்.எஸ்.விஸ்வநாதன், அக்ரி கே.பி.டி.கணேசன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் க.வேங்கடபதி, மு.முத்துச்சாமி, பி.நாச்சி முத்து, வ.சத்தியமூர்த்தி, எம்.ஜெயக்குமார், ஆர்.சேதுநாதன், ஆதி.சங்கர், ரெஜினால்ட், வெற்றிச்செல்வன், ப.சரவணன், செஞ்சிசிவா, மு.இரா.செல்வராஜ், எம். வீரகோபால், என்.வி.காமராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# எனது ஐபோன் ஒட்டுக் கேட்கப்படுகிறது!

## ராகுல் காந்தி பேச்சு!


கலிபோர்னியா, ஜூன் 4-

எம்.பி.பதவியில் இருந்து நீக்கப்பட்டது, மக்களுக்கு சேவை புரிய தனக்கு அளிக்கப்பட்ட பெரும் வாய்ப்பு" என ராகுல்காந்தி கூறினார் ஒருவார சுற்றுப்பயணமாக அமெரிக்கா சென்று உள்ளார் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி. இந்த பயணத்தின் போது தொழில் முதலீட்டாளர்கள், அமெரிக்க வாழ் இந்தியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரை சந்தித்து வருகிறார். இதில் அமெரிக்காவின் ஸ்டான்ட் போர்டு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இந்திய மாணவர்களிடையே ராகுல்காந்தி உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது: 2000 ஆம் ஆண்டு முதன்முதலாக அரசியலில் நுழைந்தபோது தகுதி நீக்கம் போன்ற கடுமையான தண்டனைகள் எல்லாம் சாத்தியமில்லை எனக் கருதினேன். ,ஆனால் தற்போது அதனை நிகழ்கால யதார்த்தமாக கண் முன்னே பார்த்து வருகிறேன்.

**கற்பனையில் கூட நினைத்ததில்லை!**

பதவியில் இருந்து நீக்கப்பட்டது, மக்களுக்கு சேவை புரிய தனக்கு அளிக்கப்பட்ட பெரும் வாய்ப்பு" என ராகுல்காந்தி கூறினார்



எம்.பி. பதவியிலிருந்து தாம் தகுதி நீக்கம் செய்யப்படுவோம் என்று கற்பனையில் கூட நினைத்ததில்லை. எம்.பி. பதவியில் இருந்து நீக்கி எனக்கு அளிக்கப்பட்ட தண்டனையானது, மக்களை சந்திப்பதற்கும் மக்களுக்கு சேவையாற்றுவதற்கும் ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளதாக கூறிய அவர் உண்மையிலேயே இது மிகப்பெரிய வாய்ப்பு எனவும் இந்த வழியில் தான் தற்போதைய அரசியல் செயல்படுவதாகவும் கூறியுள்ளார்.

மேலும், இந்த பிரச்சினைகள் 6 மாதங்களுக்கு முன்னரே தொடங்கியதாக கூறிய அவர், பெரும் நிதி ஆதிக்கமும் நிறுவன கட்டமைப்பும் நாட்டை ஆண்டு வருகிறது. ஒட்டுமொத்த எதிர் கட்சிகளும் இந்தியாவில் ஒன்று சேர்ந்து போராடி வருகின்றன. அவதூறு வழக்கில் அதிகபட்ச தண்டனை பெற்று மக்களவையில் இருந்து நீக்கப்பட்ட முதல் நபர் நான் தான் என அவர் குறிப்பிட்டார்.

ராகுல் காந்தி சிலிக்கான் பள்ளத்தாக்கு சார்ந்த ஸ்டார்ட்அப் தொழில் அதிபர்களுடன் நேரத்தை செலவிட்டார். அப்போது தனது ஐபோன் ஒட்டு கேட்கப்படுவதாகவும், அதைப் பற்றி கவலைப்படவில்லை என்றும் கூறினார். அவர் தனது ஐபோனில் "ஹலோ! மிஸ்டர் மோடி" என்று நகைச்சுவையாக பேசினார். மேலும் ஒரு தேசமாகவும் ஒரு தனிநபராகவும் தகவலின் தனியுரிமை தொடர்பாக உங்களுக்கு நிறுவப்பட்ட சட்டங்கள் தேவை என கூறினார்.

# கலைஞர் அதிகாரம்!



ஆயிரம் ஆரியமும் இழிகொண்டார் மொழித்
திணித்தும்
தீராது கலைஞரின் தமிழ்

ஊழ்வினையும் வேதக் கடும்பிணியும்
சூழ்வினையும்
வீழாதாள் கலைஞரின் பெண்

எண்ணும் எழுத்தும் கண்ணல்ல பகுத்தறியும்
பண்பே கலைஞர்க்கு விழி

பிறப்பால் தாழ்வதொழிய கலைஞர் கல்வியெனும்
சிறப்பால் விடுதலை தந்தார்

மாற்றுத் திறனாளிப் பெயராகி மலர்ந்ததுவே
காற்றின் ஊனம் களைந்து

வானமும் ஆள்வதற் குரியதாயினும் கலைஞர்க்கு
மாநில உரிமையே உயிர்

உழவர் மேம்பட புழுவும் புன்முறுவ
விளையும் கலைஞரின் நெல்

தேடல் புதுப்பிக்க தொழில்நுட்பத் தமிழ்பூக்க
டைடல் கலைஞரின் கல்

பரபரக்கும் வாழ்வினூடே கடற்கரைச் சாலைகண்
கரகரக்கும் கலைஞர் குரல்

எத்திசை யார்யார் தோன்றிபின் மறைந்தழிந்தும்
கிழக்கோடு கலைஞர் முகம்

**கபிலன் வைரமுத்து**

## உயர்ந்த கலாச்சாரமும் பாரம்பரியச் சிறப்பும் கொண்ட

# தமிழ்நாட்டில் பணிபுரிவதை பெருமையாகக் கருதுகிறேன்!

## சென்னை உயர்நீதிமன்ற புதிய தலைமை நீதிபதி கங்கா புர்வாலா பேச்சு!

சென்னை, ஜூன் 4 -

தமிழ்நாட்டின் மிக உயர்ந்த கலாச்சாரம், பாரம்பரியத்துடன் இணைந்து உங்களில் ஒருவராகப் பணியாற்றுவேன் என்று சென்னை உயர்நீதிமன்ற புதிய தலைமை நீதிபதி கூறினார்.

சென்னை உயர்நீதிமன்றதலைமைநீதிபதியாக இருந்த முனீஸ்வர்நாத் பண்டாரி கடந்த ஆண்டு ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, பொறுப்பு தலைமை நீதிபதிகளாக எம். `துரைசாமி, டி.ராஜா



ஆகியோர் அடுத்தடுத்து பதவி வகித்தனர். பொறுப்பு தலைமை நீதிபதி டி.ராஜா அண்மையில் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, சென்னை உயர்நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதிபதியாக மும்பை உயர்நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதி எஸ்.வி.கங்கா புர்வாலா நியமிக்கப்பட்டார். இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்னை உயர்நீதிமன்ற புதிய தலைமை நீதிபதியாக பதவி ஏற்றுக் கொண்டார்.

இந்த நிலையில் அவருக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் காலை வரவேற்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. புதிய தலைமை நீதிபதியை வரவேற்று அட்வகேட் ஜெனரல் ஆர்.சண்முகசுந்தரம், பார் கவுன்சில் தலைவர் பி.எஸ். அமல்ராஜ், வக்கீல் சங்கதலைவர்கள் ஜி.மோகன் கிருஷ்ணன் உள்ளிட்டோர் பேசினர்.

இந் நிகழ்ச்சியில் புதிய தலைமை நீதிபதி எஸ்.வி.கங்கா புர்வாலா பேசியதாவது:-

தமிழ்நாடு நீதித்துறை ஏராளமான சட்ட அறிஞர்களையும், சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதிகளையும், நீதிபதிகளையும், ஐகோர்ட்டு நீதிபதிகளையும் உருவாக்கி உள்ளது. அப்படிப்பட்ட உயர்ந்த நீதித்துறையில் நான் பணியாற்றுவதை பெருமையாகக் கருதுகிறேன். பெர்சியாவில் இருந்து பார்சி மக்கள் குஜராத் கடற்கரையில் வந்து இறங்கினார்கள். அப்போது, அங்கு ஆட்சி செய்து கொண்டிருந்த மன்னர், ஒரு டம்ளர் நிறைய பாலை ஊற்றி அதைக் காட்டி, உங்களுக்கு இங்கு இடம்இல்லை என்று பார்சி மக்களிடம் கூறினார்.

உடனே அந்த பார்சி மக்களின் தலைவர் ஒரு ஸ்பூன் சர்க்கரையை எடுத்து பாலில் கலந்து, பாலுடன் கலந்த சர்க்கரை போல உங்களுடன் நாங்கள் ஒருங்கிணைந்து வாழ்வோம் என்றார். அதுபோல தமிழ்நாடு மிக உயர்ந்த கலாச்சாரமும், பாரம்பரியமும் கொண்டது. கலாச்சாரம், பாரம்பரியத்துடன் இணைந்து உங்களில் ஒருவராக இந்தமாநிலத்தில் பணியாற்றுவேன்.

இவ்வாறு தலைமை நீதிபதி கங்கா புர்வாலா பேசினார்.

## தெலங்கானா மாநில ஆளுநர்

# டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து



சென்னை, ஜூன் 4-

தெலங்கானா மாநில ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.

தெலங்கானா மாநில ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் அவர்களின் பிறந்தநாளை யொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தெலங்கானா மாநில ஆளுநரும், புதுச்சேரி துணைநிலை ஆளுநருமான சகோதரி டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் அவர்களுக்கு எனது அன்புமிகு பிறந்தநாள் வாழ்த்துகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பொள்ளாச்சியில் கழக சட்ட திட்ட திருத்தக்குழு சார்பாக குழுவின் உறுப்பினர் தென்றல் செல்வராஜ் தலைமையில், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.அமுதபாரதி முன்னிலையில், அலங்கரிக்கபட்ட கலைஞர் ஐயா அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செய்து, கழக கொடிகம்பத்தை ஆர்வமுடன் புதுப்பித்த சிறுவனையே கழகத்தின் இருவண்ண கொடியேற்றி வைத்து, நாதஸ்வர மங்கள இசை முழங்க பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதைதொடர்ந்து முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.சந்திரசேகர், நகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கினார். பொள்ளாச்சி நகராட்சி 13வது வார்டு நகர மன்ற உறுப்பினர் மணிமாலா தென்றல் நிகழ்வுக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றுபேசினார். நிகழ்ச்சியில் நகர மன்ற துணை தலைவர் கௌதமன், நகர மன்ற உறுப்பினர்கள் பி.ஏ.செந்தில்குமார், ஈ.ஆர்.பி.பழனிசாமி, வட்ட செயலாளர்கள் பா.தர்மலிங்கம், கு.ராமச்சந்திரன், ஜெகதீசன், போஜராஜன், முன்னாள் நகர மன்ற உறுப்பினர்கள் கமலக்கண்ணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தனம் தங்கதுரை, மணிமாறன் தென்றல் , மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் ஜி.டி.கணேஷ் பிரசாத், நகர நிர்வாகிகள் ஆதிதிராவிடர் நலக்குழு லோகநாதன், மாணவரணி மகேந்திரன், ஜெகதீஸ், கௌதம், தகவல் தொழில் நுட்ப அணி விக்னேஷ பிரபு, அரவிந்த், தியாகி சமத்தூர் பஞ்சலிங்கம் , தாஸ் பிரபு, 18வது வார்டு மணிகண்டன், ரகு ராஜா, தினேஷ், சபரி, அரூண், கிருஷ்ணா, 13வது வார்டு காய்கறிபாலு, லேத் சுப்பிரமணியம், குமரன் நகர் செல்வராஜ் அக்னிபாபு, சிலம்பு ராஜேந்திரன், 17வது வார்டு சபரி, மனோகரன், சுரேந்திரன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.




கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், ரிஷிவந்தியம் வடக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் அரசின் ஈராண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் அத்தியூர் ஊராட்சியில் ரிஷிவந்தியம் வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் டி.ஹரிகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, கரூர் முரளி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். ஆர்.பத்மநாபன் வரவேற்புரை ஆற்றினார். க.செல்வம், ஏ.வி. செந்தில்குமார், கே.ராஜேந்திரன், எம்.குமார், தனலட்சுமி கோவிந்தன், ஆர்.சதீஷ், எஸ்.மோகனாசெல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.துரைமுருகன், தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.பெருமாள், கே.அண்ணாதுரை, ஆதி.கு.கோவிந்தராஜ், எம்.ராஜேந்திரன், ஆர்.ராஜி மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். எஸ்.ராஜாராம், எம்.பி.நாகர்ஜுன் ஆகியோர் நன்றி உரை ஆற்றினர்.




மண்ணச்சநல்லூர் சட்டமன்ற தொகுதி செயல்வீரர் கூட்டம் வடக்கு மாவட்டச் செயலாளர் ந.தியாகராஜன் எம்.எல். ஏ,எஸ். கதிரவன் எம்.எல்.ஏ. ஆகியோர் தலைமையில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, 2024 நாடாளுமன்றத் தேர்தல், புதிய கழக உறுப்பினர் சேர்க்கை மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து மண்ணச்சநல்லூர் கோபால் மஹாலில் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் அய்யம்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியினர் மாவட்டச் செயலாளர் ந.தியாகராஜன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் ஒன்றிய, நகர செயலாளர்கள், ஒன்றிய பெருந்தலைவர், துணை பெருந்தலைவர், பேரூராட்சி, ஊராட்சி மன்ற தலைவர்கள், கவுன்சிலர்கள், கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.